# 16 கிருட்டிணன் தூதுச் சருக்கம்

1. செய்வரால் இனம் உகளும் திருநாடு
பெற நினைவோ சென்று மீளப்
பைவராய் அருங் கானில் பயின்று திரிதர
நினைவோ பகைத்த போரில்
உய்வர் ஆர் என விரைவின் உருத்து எழுந்து
பொர நினைவோ உண்மையாக
ஐவராம் அவனிபர்க்கும் நினைவு ஏது என்று
அருள் புரிந்தான் அமரர் கோமான்.

''வயல்களில் வரால் மீன்களின் கூட்டம் உலவும் அழகிய குருநாட்டைச் சமாதானமாகப் பெற்றுக்கொள்ள எண்ணமோ? மீண்டும் போய்த் துன்பம் அடைபவராய் அரிய காட்டில் திரிய எண்ணமோ? பகைமை கொண்டு செய்யும் 'போரில் நமக்கு எதிரில் பிழைப்பவர் யார்?' என்று எண்ணி விரைந்து சினம் கொண்டு போர் செய்ய எண்ணமோ? உங்கள் ஐவருக்கும் உண்மையான எண்ணம் யாது?' என்று தேவர்களின் தலைவனான கண்ணன் வினவினான்.

உகளும் - உலவும்
உருத்து - சினந்து
பொரல் - போர் செய்தல்

2. வயிரம் எனும் சுடு நெருப்பை மிக மூட்டி
வளர்க்கின் உயர் வரைக்காடு என்ன
செயிர் அமரில் வெகுளி பொர சேர இரு
திறத்தேமும் சென்று மாள்வோம்
கயிரவமும் தாமரையும் கமழ்பழனக்
குருநாட்டில் கலந்து வாழ
உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள் என்றான்
அறத்தின் உருவம் போல்வான்.

அறத்தின் வடிவைப் போன்ற தருமன், ''எங்கள் உயிர் போன்றவனே! பகைமையான கொடிய தீயை மிகுதியாக மூட்டி வளர்த்தால் உயர்ந்து வளர்ந்த மூங்கில் காடு தானே அழிந்து போவதைப் போல், கடுமையான போரில் சினத்துடன் போர் செய்தால் ஒரு சேரத் துரியோதனாதியரும் நாமும் இறப்போம். அங்ஙனம் நிகழாது ஆம்பல் மலரும்,

தாமரை மலர்களும் மணம் கமழ்கின்ற வயல்களையுடைய குருநாட்டில் நாங்கள் இரு பக்கத்தவரும் கூடி வாழும்படி சமாதானம் உண்டாக நீ அவர்களிடம் தூது சென்று வருக!'' எனக் கண்ணனை நோக்கிச் சொன்னான்.

| | |
|---|---|
| வரைக்காடு | - மூங்கிற்காடு |
| செயிர் | - கொடிய, கருமையான |
| அமர் | - போர் |
| கயிரவம் | - ஆம்பல் |
| பழனம் | - வயல் |
| சந்து | - சமாதானம் |

3. அரவுயர் த்தோ னுடன் மறுசூது ஆடிநீர் வென்
றவந்நாள் அவன்தான் சொன்ன
விரத மொழி தவிராமல் வெங்கானம்
போய் மீண்டீர் வெய்யோன் உங்கள்
குருநிலத்தில் பாதி இனிக் கொடாதிருந்தால்
ஆங்கு அவனைக் கொன்று போரில்
இருநிலத்தை ஆள இனித் துணிவதே
கடன் என்றான் எம்பி ரானே.

''பாம்புக் கொடியையுடைய துரியேதனனுடன் இரண்டாம் முறை சூதாட்டம் ஆடி, நீங்கள் வெற்றி கண்ட அக்காலத்தில், அத்துரியோதனன் கூறியபடி தவறாது கொடிய காட்டில் சென்று திரும்பிவிட்டீர். இனிக்கொடிய துரியோதனன் குருநாட்டில் உங்களுக்கு உரிய பாதிப் பங்கைக் கொடுக்காமல் இருந்தால், அவனைப் போரில் கொன்று இரு பக்கத்தவரின் நாட்டையும் சேர்த்து ஆள எண்ணி முடிவு செய்வதே இனி செய்வதற்குரிய கடமையாகும்'' என்று நமக்கெலாம் தலைவனான கண்ணன் சொன்னான்.

இருநிலம் - பெரிய நிலம்

4. குரவரையும் கிளைஞரையும் குலத்து உரிய
துணைவரையும் கொன்று போர் வென்று
அரவ நெடுங்கடல் ஆடை அவனி எலாம்
தனி ஆளும் அரசு தன்னில்
கரவு உறையும் மனத் தாதை முனிக்கு உரைத்த
மொழிப்படியே கானம் தோறும்
இரவு பகல் பல மூல சாகம் நுகர் ந்து
உயிர் வாழ்தல் இனிது நன்றே.

‘‘சான்றோரையும் உறவினரையும் ஒரு குலத்திற் தோன்றிய தம்பியரையும் போரிலே கொன்று ஆரவாரம் கொண்ட பெருங்கடலை ஆடையாக உடுத்த, நிலம் முழுவதையும் வேறு எவருமின்றித் தனித்து ஆளும் அரசாட்சியைவிட, வஞ்சம் பொருந்திய மனம் கொண்ட பெரிய தந்தை திருதராட்டிரன், சஞ்சய முனிவனிடத்தில் சொல்லியனுப்பிய சொற்படி காடுகள் தோறும் போய் இரவிலும் பகலிலும் பழம், கிழங்கு, இலைகள் ஆகியவற்றை உண்டு உயிர் வாழ்தல் மிகவும் நல்லதே’’.

கிளைஞர் - உறவினர்
கரவு - வஞ்சனை
மூலசாகம் - பழம் கிழங்கு, இலை முதலியன

5. கோது இலான் இந்த மொழி கூறுதலும்
மாமாயன் கூறல் உற்றான்
மோதமருந்து இளைத்து நீர் மொய்த்த பெருங்
கானகத்தே முடுகிச் சென்றால்
பூதலத்தோர் ஏசாரோ புகன்றபெரு
வஞ்சினமும் பொய்த்திடாதோ
நீதியோ என வுரைத்தான் ஆங்கதற்கு
நிகழ்தருமன் நிகழ்த்தல் உற்றான்.

குற்றமில்லாத தருமன் இந்த மொழியைச் சொல்லவும், மிகுந்த மாயையுடைய கண்ணன் சொல்லலானான்: ‘‘நீங்கள் தாக்கிச் செய்யும் போருக்கு பின்னடைந்து நெருங்கிய காட்டில் விரைந்து போவீராயின், இவ்வுலகத்தவர் எல்லாரும் இகழ மாட்டாரோ? துரியோதனன் அவையில் திரௌபதியைத் துகில் உரிந்தபோது நீங்கள் கூறிய சபதமும் பொய்த்துவிடாதோ? நீங்கள் அவ்வாறு செய்வது அரசர்க்கு அறமா?’’ என்று மொழிந்தான். அப்போது அக்கண்ணன் உரைத்தற்கு விடையைத் தருமன் சொல்லத் தொடங்கினான்.

கோது - குற்றம்
மொய்த்த - நெருங்கிய
முடுகி - விரைந்து

6. நீ தூது நடந்தருளி எமது நினைவு
அவர்க்கு உரைத்தால் நினைவின் வண்ணம்
தாது ஊதி அளி முரலும் தண்பதியும்
தாயமும் தான் தாரான் ஆகில்
மீது ஊதுவளைக் குலமும் வலம் புரியும்
மிக முழங்க வெய்ய காலன்
மாதூதர் மனம் களிக்கப் பொருது எனினும்
பெறுவன் இது வசையும் அன்றே.

‘‘நீ தூதாகச் சென்று எம் நினைவை அவர்க்கு எடுத்துச் சொன்னால், நம் நினைவின்படி மலர் இதழ்களை வாயால் ஊதி வண்டுகள் ஒலித்ததற்கு இடமான குளிர்ந்த நாட்டின் பாகத்தையும் அப்பங்குக்குரிய அதிகாரங்களையும் அந்தத் துரியோதனன் தருவான். அவன் அப்படித் தாராது போயின், அதன் பின் ஒலிக்கும் சங்குகளின் கூட்டமும் சிறந்த வலம்புரிச் சங்குகளும் மிகுதியாய் ஒலிக்க, கொடிய எமதூதர் மனம் மகிழப் போர் செய்தாயினும் நாட்டைப் பெறுவேன்’’. இவ்வாறு முதற்கண் சமாதானத்தை மேற்கொண்டு அது நிறைவேறாதவிடத்துப் போர் செய்வது பழியும் அன்று.

தாது - மலரிதழ்
அளி - வண்டு
முரல்தல் - ரீங்காரம் செய்தல்
தண்பதி - குளிர்ந்த நாடு
தாயம் - அதிகாரம்
வளை - சங்கு

7. முந்து ஊர் வெம் பணிக் கொடியோன் மூதூரில்
நடந்து உழவர் முன்றில்தோறும்
நந்து ஊரும் புனல் நாட்டின் திறம் வேண்டு
நாடு ஒன்றும் நல்கான் ஆகில்
ஐந்து ஊர் வேண்டு அவை இல் எனில் ஐந்து இலம்வேண்டு
அவை மறுத்தால் அடு போர் வேண்டு
சிந்தூரத் திலக நுதல் சிந்துரத்தின்
மருப்பு ஒசித்த செங்கண் மாலே.

‘‘சிந்தூரம் என்ற செந்நிறப் பொடியால் ஆன திலகத்தை அணிந்த நெற்றியையுடைய குவலயா பீடம் என்ற யானையின் கொம்பை ஒடித்த சிவந்த கண்ணையுடைய திருமாலே! விரைவாய் ஊர்ந்து செல்லும் கொடிய பாம்புக் கொடியையுடைய துரியோதனனின் பழமையான அத்தினாபுரியில் நீ போய், உழவரின் இல்லங்கள் முன்னிடமெல்லாம் சங்குகள் தவழப்பெறும் நீர் வளம் கொண்ட குருநாட்டின் பாகத்தைத் தரும்படியாகக் கேள். அவன் அதைத் தர மறுத்தானாகில் ஐந்து ஊர் களைத் தருமாறு கேள். அவன் அந்த ஊர்களையும் தரவில்லையானால் ஐந்து இல்லங்களைத் தருமாறு கேள். அவற்றையும் அவன் தர மறுத்தால் கொல்வதற்குரிய போரை வேண்டு!’’ என்று தருமன் சொன்னான்.

பனிக்கொடி - பாம்புக்கொடி
ஒசித்த - ஒடித்த

8. மூத்தோன் மற்று இவை உரைப்ப இளையோன்
வெஞ்சினம் மனத்திலே மூளமூள
நாத் தோம் இல் உரை பதறக் கதுமென உற்று
எழுந்து இறைஞ்சி ஞாலம் எல்லாம்
பூத்தோனே பூந்தவிசில் பூவை புணர்
மணி மார் பா புன்மை யாவும்
தீர் த்தோனே ஊனம் இலான் மானம் இலாது
உரைப்பதற்கு என் செய்வது என்றான்.

மூத்தவனான தருமன் இத்தகையவற்றைச் சொல்ல, அவனுக்குத் தம்பியான வீமன், தன் உள்ளத்தில் கொடிய சினம் அதிகமாய் வளர வளர, நாவினின்று வெளிப்படும் குற்றமற்ற சொற்கள் குளற, விரைவாய் எழுந்தான். கண்ணனை வணங்கினான். ''உலகம் எல்லாம் கொப்பூழினின்று உண்டாகப் பெற்றவனே! தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் அமர்ந்திருக்கப் பெறும் கௌத்துபம் என்ற மணியை அணிந்த மார் பினனே! அடியாரின் குறைகளையெல்லாம் நீக்கியவனே! குற்றம் இல்லாத இத்தருமன் மானம் இன்றி இவ்வாறு பேசுவதற்கு நாம் என்செய்வது?'' என்றான்.

கதுமென - விரைவாக
பூந்தவிசு - மலராசனம்

9. விரி குழல் பைந்தொடி நாணி வேத்தவையில்
முறையிடு நாள் வெகுளேல் என்று
மரபினுக்கும் நமக்கும் உலகு உள்ள அளவும்
தீராத வசையே கண்டாய்
எரி தழல் கானகம் அகன்றும் இன்னமும் வெம்
பகை முடிக்க இளையா நின்றாய்
அரவு உயர் த்தோன் கொடுமையினும் முரசு உயர்ந்தோய்
உனது அருளுக்கு அஞ்சினேனே.

துச்சாதனன் பிடித்து இழுத்ததால் குலைந்து விரிந்த கூந்தலையுடைய பசிய கொடி போன்ற திரௌபதி, அரசவையில் நாணம் கொண்டு அழுது புலம்பியபோது, நின் தம்பியரான எங்களைத் தனித்தனி கோபிக்க வேண்டா என்று சொல்லி நமக்கும் நம் குலத்துக்கும் உலகம் உள்ள அளவும் நீங்காத பழியை ஏற்படுத்தி விட்டாய். எரியும் தீயையுடைய காட்டில் வாழ்ந்து பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னும், மறைந்து வாழும் ஓராண்டு வாழ்வு தீர்ந்த பின்னும், கொடிய பகைவரான துரியோதனன் முதலியவரைக் கொல்வதற்குப் பின்வாங்குகின்றாய்! முரசுக் கொடியை உயர்த்தியவனே! பாம்புக்கொடியை உயர்த்திய துரியோதனனின் இரக்கமில்லாமைக்கு அஞ்சுவதைவிட அதிகமாக உன் அருளுக்கு அஞ்சுகின்றேன்.

10. கான் ஆள உனை விடுத்த கண் இலா
அருளிலிதன் காதல் மைந்தன்
தான் ஆளும் தரணி எல்லாம் ஒரு குடைக் கீழ்
நீ ஆளத் தருவன் இன்றே
மேல்நாள், நம் உரிமை அறக் கவர்ந்த பெருந்
துணைவன், உனை வெறாதவண்ணம்
வான் ஆள வானவர் கோன்தன் பதம் மற்று
அவன்தனக்கே வழங்குவேனே.

காட்டில் வாழுமாறு உன்னை அனுப்பி பிறவிக் குருடனான அருள் இல்லாத நெஞ்சுடைய திருதராட்டினனின் அன்பு மகன் துரியோதனன் தற்போது ஆண்டு வரும் நாடு முழுவதையும் ஒரு வெண்குடையின் கீழ் நீ அரசாளுமாறு இப்போதே உனக்குத் தருவேன். அம்மட்டோ! முன்னாளில் நமக்குரிய ஆட்சிச் செல்வம் முழுவதையும் கவர்ந்து கொண்ட பெரிய தம்பியாம் துரியோதனன், தன் ஆட்சியை நீ கொண்டமைக்காக உன்னை வெறுக்காத வண்ணம் வானை ஆள (வீர சுவர்க்கத்தை அடையுமாறு) தேவரின் மன்னனான இந்திரனின் அமராவதி நகரத்தை அத் துரியோதனனுக்கே அளிப்பேன்.

11. போர் முடித்தானமர் பொருது புலம்புறுசொல்
பாஞ்சாலி பூந்தண் கூந்தல்
கார் முடித்தா னிளையோர் முன் கழறிய
வஞ்சின முடித்தான் கடவுள் கங்கை
நீர் முடித்தான் இரவொழித்த நீ அறிய
வசை இன்றி நிலைநின்று ஓங்கும்,
பேர் முடித்தான் இப்படியே யார் முடித்தார்
இவனுடனே பிறப்பதேநான்.

கடவுள் தன்மையுடைய கங்கை ஆற்றின் நீரைச் சடையில் கொண்ட சிவனது யாசிக்கும் தொழிலை நீக்கிய நீ அறியப் போரை முடித்தான். போரைச் செய்து, அழுகை மிக்க சொல்லையுடைய பாஞ்சாலியின் அழகிய குளிர்ந்த மேகம் போல் கரிய கூந்தலை முடித்துக்கொள்ளுமாறு செய்தான். அவையில் முன் தம்பியர்க்குரிய சபதம் முடியச் செய்தான். பழியின்றி என்றும் அழியாமல் சிறந்து நிற்கின்ற புகழ் முழுவதும் பெற்றான். இப்படி முடிக்க வேண்டிய எல்லாவற்றையும் முடித்தவர் இவனைப்போல யார் உள்ளார்? (தூய வீரனான) நான் (வீரமற்ற) இவனுடன் தம்பியாய்ப் பிறப்பது தகுதியோ?

12. அணிந்து வரும் சமரில் எதிர் ந்து அரவு உயர்த்தோ
னுடன் அரசர் உடலம் எல்லாம்
துணிந்து இரண்டு படப் பொருது தொல்லை உலகு
அரசு ஆளத் துணிவது அல்லால்
தணிந்து அறமும் கிளை உறவும் கொண்டாடி
தான் இன்னம் தனித் தூது ஏவி
பணிந்து இரந்து புவி பெற்று உண்டிருப்பதற்கே
துணிகின்றான் பட்ட பாடே

''இரு பக்கத்துப் படைகளும் அணிவகுத்து வரும் போர்க்களத்தில் பாம்புக் கொடியையுயர்த்திய துரியோதனனுடன் எதிர்த்து (துரியோதனனும் அவனுக்குத் துணையாய் வரும்) மன்னரின் உடல்கள் எல்லாம் துண்டாகி இரண்டுபடப் போர் செய்து, பகையை அழித்து, பழைய உரிமையான நாட்டை ஆட்சி செய்யத் துணிவு கொள்வதே அல்லாது, இத்தருமன் அமைதியாய் அறத்தையும் உறவினரின் உறவு முறையையும் பெரிதாகப் பாராட்டி உலூக முனிவனைத் தூது அனுப்பிய பின், மறுபடியும் ஒரு தூதை அனுப்பி, பகைவனை வணங்கி யாசித்து நாட்டைப் பெற்று, உணவை உண்டு உயிர் வாழ்வதற்கே துணிந்துள்ளான். நாம் அனுபவித்த எல்லா வருத்தத்தைவிட இது மிக்க வருத்தமாகும்.''

துணிந்து - துண்டாகி

13. பரிவுடன் மற்று இலை கூறும் பவன குமாரனை
மலர்க்கை பணித்து நோக்கி
குருகுலத்தோர் போர் ஏறே குற்றமது
பார்க்குங்கால் சுற்றம் இல்லை
ஒரு குலத்தில் பிறந்தார்கள் உடன் வாழும்
வாழ்வினைப் போல் உறுதி உண்டோ
இருவருக்கும் வசை அன்றோ இரு நிலம்
காரணமாக எதிர்ப்பது என்றான்.

வருத்தத்துடன் இத்தகைய சொற்களைச் சொல்கின்ற காற்றின் மைந்தனான வீமனைத் தருமன் தாமரை மலர் போன்ற தன் கையால் மேலும் பேசாது அமரச் செய்தான். அவனைப் பார்த்து ''குருகுலத்தில் தோன்றிய மன்னருள் போர் ஆற்றல் வாய்ந்த ஆண் சிங்கம் போன்றவனே! குற்றத்தையே பார்த்துக்கொண்டிருப்பின், நமக்கு உறவு என்பது இல்லாமல் போகும். ஒரு குலத்தில் பிறந்தவர் தங்களுக்குள் மாறுபாடின்றி ஒன்றுபட்டு வாழும் வாழ்க்கையைப்போல நன்மை அளிப்பது வேறு ஒன்றுண்டோ? பெரிய நாட்டின் காரணமாகப் போர் செய்வது இரு திறத்தார்க்கும் பழியையே ஏற்படுத்தும் அன்றோ'' எனச் சொன்னான்.

பவனகுமாரன் - வாயுவின் மகன் வீமன்


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

14. உரிமையுடன் தம்பியர் அன்று உணர்வு அறியாமையின்
அவைக்கண் உரைத்த மாற்றம்
பரிபவமோ கேட்டோர் க்குப் பரிபவம் என்பது
பிறரால் பட்டால் அன்றோ
கருதில் இது மற்று எவர் க்கும் ஒவ்வாதோ
கண் மலரில் கை படாதோ
பொரு தொழிலும் கடை நிலத்தில் கிடந்ததே
என மொழிந்தான் புகழே பூண்பான்.

''நம் தம்பியர், உரிமையாலும் நல்ல அறிவு இல்லாமையாலும் அன்று சபையில் சொன்ன சொல்லைக் கேட்டவர்க்கு அவமானத்தை அளிப்பதோ? அவமானம் என்பது பிறரால் உண்டாவதன்றோ! ஆராய்ந்து பார்க்கின் '¤றரால் உண்டாவது மட்டுமே அவமானம், தம்மவரால் உண்டாவது அவமானம் ஆகாது' என்பது உலகத்தே எல்லார்க்கும் சம்மதமாகாதோ? எல்லார்க்கும் சம்மதமே! ஒருவனின் தாமரை மலர் போன்ற கண்ணில் அவனுடைய கையானது படுவதில்லையா? போர்த் தொழிலும், வேறு வழியில்லாதபோது, மன்னர்க்குரிய உபாயங்களுள் இறுதியாகக் கையாள வேண்டிய ஒன்றாகும்'' என்று புகழையே அணியாகப் பூண்ட தருமன் வீமனைப் பார்த்துச் சொன்னான்.

பரிபவம் - அவமானம்

15. சூடுகின்ற துழாய் முடியோன் சுரருடனே
முனிவர்களும் சுருதி நான்கும்
தேடுகின்ற பதம் சிவப்ப திரு நாடு
பெறத் தூது செல்ல வேண்டா
வாடுகின்ற மடப் பாவைதன் வரமும்
என் வரமும் வழுவா வண்ணம்
கோடுகின்ற மொழியவன்பால் எனைத் தூது
விடுக இனி கொற்ற வேந்தே.

''வெற்றி பொருந்திய மன்ன! அணிகின்ற துளசி மாலையைச் சூடிய முடியையுடைய கண்ணன், தேவரும் முனிவரும் நான்கு மறைகளும் இன்னமும் உண்மை காணாது தேடுகின்ற தன் திருவடிகள் நடப்பதால் சிவக்க, செல்வம் உடைய நாட்டைப் பெறுவதன் பொருட்டாகத் தூது செல்ல வேண்டியதில்லை. வருந்தும் மங்கையாம் திரௌபதியின் சபதமும் என் சபதமும் தவறாத வண்ணம், நீதி தவறிச் சொன்ன சொல் தவறிப் பேசும் துரியோதனனிடம் இனிமேல் என்னைத் தூதாக விடுப்பாயாக!''

சுரர் - தேவர்
கோடு - நீதி தவறிய

## வினாக்கள்

1. தரப்பட்ட பாடல்களை

   அ. சந்தி பிரித்து எழுதுக.

   ஆ. கொண்டு கூட்டி எழுதுக.

   இ. அரும்பதங்களுக்கான பொருளை அறிக.

2. தருமனின் சமாதான மனப்போக்கு எவ்வாறு வெளிக்காட்டப்படுகின்றது ?

3. துரியோதனனிடம் தூதாகச் சென்று எவற்றைக் கேட்டு வரும்படி தருமன் கூறினான் ?

4. கிருஷ்ணரைத் தூதனுப்பத் துணிந்த தருமனை நோக்கி வீமன் கூறிய விடயங்கள் எவை ?

5. கிருஷ்ணரைத் தூதனுப்ப வேண்டியதன் அவசியம் பற்றி தருமர் கூறுவது என்ன ?

6. பின்வருவோரின் மனநிலை பற்றி இப்பகுதியினூடாக வெளிப்படுத்தப் படுவதென்ன ?

   ★ தருமன் ★ வீமன் ★ கிருஷ்ணர்

7. இவ் வரலாற்றினைத் தேடிப் பெற்று வாசித்தறிக.